# SPASTI NEWS

Quarterly Newsletter of
The Spastics Society of Tiruchirapalli

No.5, Revival Nagar, Ramalinga Nagar South Extension, Vayalur Road,
Trichy - 620 017, Tamilnadu. Phone : 0431 - 2772001

(For Private Circulation Only)

Package XVIII | JANUARY - MARCH 2021 | Boon I


## செயலர் கடிதம்

அன்புடையீர் வணக்கம்,

***SPASTI NEWS*** என்ற எமது செய்தி மலர் மூலம் மீண்டும் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

தேசிய அறக்கட்டளை என்பது இந்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டபூர்வ அமைப்பு. இது ஆட்டிசம், மூளை முடக்குவாதம், மனவளர்ச்சி குறைபாடு, மற்றும் பல்வகை ஊனமுற்றோரின் நலனுக்காக செயல்பட்டு வருகிறது. பல்வேறு நலத்திட்டங்கள் இந்த அமைப்பின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இரண்டு முக்கிய நலத்திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

### காப்பாளர் நியமனச் சான்றிதழ்

தேசிய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புத் தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு காப்பாளர்களையும், அறங்காவலர்களையும் நியமிக்கலாம். 18 வயதை தாண்டிய ஆட்டிசம், மூளை முடக்குவாதம், மனவளர்ச்சி குறைபாடு மற்றும் பல்வகை ஊனமுற்ற நபர்களுக்கு காப்பாளர்களை நியமிக்கும்படி பெற்றோர் அல்லது உறவினர் விண்ணப்பிக்கலாம்.

### காப்பாளர் நியமனத்திற்கு தேவைப்படும் ஆவணங்கள்

1. ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை நகல்
2. **UDID** - தனித்துவ அடையாள அட்டையின் நகல்
3. மாற்றுத்திறனாளி மற்றும் காப்பாளர் குடும்ப அட்டை நகல்
4. மாற்றுத்திறனாளி ஆதார் கார்டு நகல்
5. காப்பாளர் ஆதார் கார்டு நகல்
6. பெற்றோர் இல்லாதவர்களுக்கு இறப்பு சான்றிதழ் நகல்
7. மாற்றுத்திறனாளியும் காப்பாளரும் சேர்ந்த புகைப்படம் - 2 பாஸ்போர்ட் சைஸ்
8. 2 சாட்சி கையொப்பமிட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் (**Form -1**)
9. பாதுகாவலராக இருப்பவரின் ஒப்புதல் படிவம் (Form -2)

- மேலே குறிப்பிட்டுள்ள 1 முதல் 6 வரை உள்ள அசல் ஆவணங்களை பரிசீலனைக்காக நேரில் வரும்போது காண்பிக்கவும்.
- Form -1 & Form - 2 அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### நிரமயா காப்பீடு திட்டம்

இந்த திட்டத்தின் மூலம் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பிலான இலவச மருத்துவக் காப்பீடு உதவிகள் பெறலாம். இந்த திட்டத்தில் சேர ஆண்டு வருமானம் ரூ. 15,000 வரை உள்ளவர்கள் ரூ. 250-ம் மற்றும் ஆண்டு வருமானம் ரூ. 15,000 மேல் உள்ளவர்கள் ரூ. 500-ம் தேசிய அறக்கட்டளைக்கு இணையதளம் மூலம் செலுத்த வேண்டும். இதன் பயனை தொடர்ந்து பெற ஒவ்வொரு ஆண்டும் உரிய பணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்வது அவசியம். மருவத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின் பணம் செலுத்திய ரசீதை 30 நாட்களுக்குள் தேசிய அறக்கட்டளை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து செலவு செய்த பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

### உள்ளூர் கமிட்டி

தேசிய அறக்கட்டளையின் நலத்திட்டங்களை அமுல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் உள்ளூர் கமிட்டி செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளூர் கமிட்டியின் பதிவு பெற்ற நிறுவனத்தின் பிரதிநிதியாக நமது மையம், ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி ஆ்.ப் திருச்சிராப்பள்ளி செயல்பட்டு வருகிறது.


பெற்றோர்களாகிய நீங்கள் அரசு நலத்திட்டங்களை அறிந்து கொள்வதோடு அதனை பெற்றுக்கொள்ள தகுந்த முறையில் அணுகி அதன் பயனையும் அனுபவிக்குமாறு கேட்டுக் கொண்டு எனது கடிதத்தை இத்துடன் முடிக்கின்றேன்.

நன்றி,

நவிலு சுப்ரமணியன்
செயலாளர்.

**பாகம் 2**


8. வீல்சேர் வடிவமைக்க அளவெடுக்கும் முறை
9. வீல்சேரை பராமரிக்கும் முறைகள்
10. வீல்சேர் உபயோகிக்க தேவையான தடையற்ற சூழல்
11. சமுதாயத்தில் பங்கு கொள்ளுவதற்கு வீல்சேர் எவ்வகையில் பயனுள்ளதாக இருக்கும்.
12. நமது பள்ளியில் வீல்சேர் பயிற்சினால் குழந்தைகளுக்கு ஏற்பட்ட முன்னேற்றங்கள்.


## 8. வீல்சேர் வடிவமைக்க அளவெடுக்கும் முறை

இரண்டு நபர்கள் சேர்ந்து அளவெடுப்பது எளிதாக இருக்கும். பாதம் தரையிலிந்து 5cm மேலே இருக்குமாறு உள்ள உயரமுடைய stool –ல் அமரவைத்து அளவு எடுக்க வேண்டும். பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஒருவர் அவர்களின் அருகில் நின்று பிடித்துக்கொள்ளலாம். மற்றொருவர் inch tape–ல் தேவையான அளவுகளை அளவிட்டு வரைபடத்தில் குறித்துக் கொள்ளலாம். இடுப்பு மற்றும் முழங்கால் முட்டி 90° மடங்கி இருக்கும் நிலையில் அளவிட வேண்டும்.

உட்காரும் இருக்கையின் அகலம்

**Seat Widh** - இரண்டு இடுப்பு பகுதியின் அகலத்தை விட இரண்டு பக்கமும் கூடுதலாக 2-3cm இருக்க வேண்டும்.

**Seat Depth** - இருக்கையின் நீளம் முட்டி 90° மடங்கிய நிலையில் உட்காரும் போது முழங்கால் முட்டியின் பின்புறத்தில் உள்ள கோட்டிற்கும் சீட்டின் முன்பகுதிக்கும் 4cm இடைவெளி இருப்பது அவசியம்.

**Seat Height** – குதிக்காலின் கீழ்புறத்தில் இருந்து முட்டியின் பின்புற கோட்டின் உயரத்திற்கு அளவிட வேண்டும். தொடைப்பகுதி 90° - க்கு கூடுதலாக மடங்கி இருக்கும் நிலை உள்ளவாறு உட்காரும் seat ன் அமைப்பு இருக்க வேண்டும். இந்த அமைப்பு குழந்தைகள் முன்புறமாக வழுக்கி செல்லாதவாறு உட்காருவதற்கு எளிதாக இருக்கும். நிமிர்ந்து உட்காரமுடியாத குழந்தைகளுக்கு சமமாக இருப்பது நல்லது.

**Headrest** – தலை நிற்பதற்கான பலகையின் உயரத்தை தேவைகேற்றவாறு சற்று மேலாகவும், கீழாகவும் நகர்த்தும் வசதியுடன் அமைத்து கொள்வது சிறந்தது. கீழ்நோக்கி பார்க்கும் குழந்தைகளுக்கு உயரத்தை குறைத்து கொள்ளலாம். மேல்நோக்கி பார்க்கும் குழந்தைக்கு உயரத்தை சற்று அதிகபடுத்திக் கொள்ளலாம்.

**Wheels** - வீல்சேரில் நிமிர்ந்து உட்கார்ந்த நிலையில் கையை நேராக முழங்கை மடங்காமல் நீட்டினால் விரல்கள் வீல்களின் மையப்பகுதியை தொடும் அளவிற்கு இருக்க வேண்டும். வீல்கள் பெரிதாக இருந்தால்தான் முழங்கையை 90° - 120° அசைவினில் நகர்த்தி செல்வதற்கு எளிதாக இருக்கும். பராமளிப்பாளர் நகர்த்தி செல்லும் வீல்சேர்களுக்கு சிறிய வீல்களே போதுமானது.

**Armrest** - முழங்கை மூட்டை 90° மடங்கிய நிலையில் வைத்து அம்மூட்டில் இருந்து உட்காரும் சீட்டு வரை உள்ள தூரத்தை அளவிட வேண்டும்.

**Belt** - அனைத்து வகையான வீல்சேர்களிலும் இடுப்புப்பகுதியில் அணியும் belt மிகவும் அவசியம். தேவைக்கு ஏற்றவாறு தொடைகளுக்கும் பாதத்திற்கும் belt பயன்படுத்திக்கொள்ளலாம். உட்காருவதற்கு சிரமம் அதிகமாக உள்ள குழந்தைகளுக்கு Chest Beltஐ H-வடிவத்தில் அமைப்பது உதவியாக இருக்கும்.

**Cushion** - உட்காருவதில் சிரமம் உள்ளவர்களுக்கும் உடல் அமைப்பு நிலையில் மாறுபாடு (deformities) உள்ளவர்களுக்கும் தேவைக்கு ஏற்றவாறு Cushion- கள் வடிவமைத்து தரவேண்டும்.

## 9. வீல்சேரை பாராமரிக்கும் முறைகள்

**தினசரி பாரமரிப்பு** வீல்சேர் என்பது தினசரி பயன்படுத்தக்கூடிய உபகரணமாக இருப்பதால், அதனுடைய இயக்கம் மற்றும் வலிமையை தினசரி பரிசோதிப்பது அவசியமாகும். பாதுகாப்பிற்கும் வீல்சேர் நீண்டநாள் பழுதாகாமல் உபயோகப்படுத்துவதற்கும் தினசரி பரிசோதிப்பது அவசியம்.

தினசரி பரிசோதனைகள்:

- Bolt களின் இயக்கம் (wheel ன் மையப்பகுதி bolts)
- Footrest அமைப்பு
- நான்கு வீல்களின் அசைவுகள்
- Tyre களில் உள்ள காற்று
- உட்காரும் சீட்டின் பலம்
- Break
- Powered வீல்சேராக இருப்பின் பேட்டரி சார்ஜ் செய்தல்.

வீல்சேரில் பொதுவாக பழுதாகும் பாகங்கள்

1. Footrest ன் பலம்
2. Bearing இறுக்கம், வீல்களின் வளைவுகளால் உருவாகும் பிரச்சனைகள்
3. முன்புற வீல்களின் அசைவுத்தன்மை.
4. உட்காரும் சீட்டின் பலம்
5. Break ன் தன்மை
6. உடல் அமைப்பு நிலைக்கு பயன்படும் belt களின் கொக்கி
7. குழந்தையின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு Cushion கள் மற்றும் தடுப்புகளின் அளவுகளை சரிபார்க்கவும்.
8. Powered வீல்சேராக இருந்தால் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு பேட்டரி மாற்ற வேண்டும்.

வீல்சேர் பழுதாகுவதை தடுப்பதற்கான சிறந்த முறைகள்.

1. அசையும் இடங்களில் அவ்வப்போது எண்ணெய் விடுதல்
2. அசையும் இடங்களில் சிக்கிக் கொள்ளும் நூல், முடி போன்றவற்றை சுத்தம் செய்ய வேண்டும்.
3. வீல்களில் குறைந்த காற்றுடன் நகர்த்தி செல்வதை தவிர்க்க வேண்டும்.
4. மேடு பள்ளங்களில் மெதுவாக நகர்த்தி செல்ல வேண்டும்.
5. துறு பிடிக்காதவாறு ஈரப்பதம், தூசிகளை துடைக்க வேண்டும்.
6. சிறிய பழுதாக இருந்தாலும் உடனடியாக சரி செய்யவேண்டும்.

மேலே கூறிய பராமரிப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

## 10. வீல்சேல் உபயோகிக்க தேவையான தடையற்ற சூழல் (Barrier Free Environment)

1. வீட்டு வாசலில் ramp அமைத்தல் (1 feet height : 12 feet Length )
2. வீட்டின் நுழைவாயில் / குளியல் அறையின் அகலம் 3 feet இருக்க வேண்டும்
3. அனைத்து அறைகளின் நுழைவாயில் சமமாக இருப்பது நல்லது
4. பொது இடங்களில் வீல்சேர் எளிதாக நகர்ந்து செல்ல சமதரை அமைக்க வேண்டும். (Wheel Chair Platform)







நமது பள்ளியின் குழந்தைகள் தானாக பயன்படுத்தும் வகையில் ஸ்விட்ச்சுகளை உயரம் குறைவான இடத்திலும், வண்ணங்கள் வேறுபட்டும் எளிதாக பார்க்க கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ளது.



நமது பள்ளியின் குழந்தைகள் தானாக கைக்கழுவும் வகையில் பைப் (Long Hand Lever) பொருத்தப்பட்டும், வீல்சேர் அவ்விடத்தில் உள் நுழைந்து பயன்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 11. சமூதாயத்தில் பங்கு கொள்வதற்கு வீல்சேர் எவ்வகையில் பயனுள்ளதாக இருக்கும்

சமுதாயத்தில் பங்கு கொள்வதற்கு தனிநபர், குடும்பநபர்களின் மனநிலைகள் மற்றும் சுற்றுப்புற சூழலின் வசதிகள் ஆகியவற்றின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும். ஒருவரின் இயலாமை தன்மைக்கு ஏற்றவாறு வீல்சேர் பயிற்சி அளிக்க வேண்டும். சிறிய குறைபாடு உள்ளவர்கள் வீல்சேரை பயன்படுத்தி அனைத்து இடங்களுக்கும் சென்றுவர முடியும் (GMFCS III). குறைபாடு அதிகம் உள்ளவர்கள் வீட்டினுள் அல்லது பள்ளி வளாகத்தினுள் தன்னுடைய தேவைக்கேற்ப பயன்படுத்துவர் (GMFCS IV & V). இவர்களில் ஒரு சில நபர்கள் சுயமாக வீல்சேரை நகர்த்தி செல்வார்கள் (GMFCS IV). அதிக பாதிப்பு உள்ளவர்களுக்கு பராமரிப்பாளர்கள் நகர்த்தி செல்வார்கள் (GMFCS V). பாதிப்பு நிலை குறைவாக அல்லது அதிகமாக இருந்தாலும் அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுடைய குடும்பநபர்களையும் ஊக்கப்படுத்தி சமுதாயத்தில் அனைத்து இடங்களிலும் பங்குகொள்ள செய்வதே ஒரு சிறந்த பயிற்சியாக இருக்கும். அதற்கேற்ற சுற்றுப்புற சூழ்நிலையை மாற்றிதருவதற்கு முயற்சிகள் செய்வது நமது கடமையாகும். நடப்பதில் சிரமம் உள்ள அனைத்து உடல் இயக்க மாற்றுத்திறனாளிகளுக்கும் சமுதாயத்தில் பங்கு கொள்வதற்கு வீல்சேர் ஒரு சிறப்பான உபகரணம் என்பதை நிருபிக்க பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் உள்ளன.

## 12. நமது பள்ளியில் வீல்சேர் பயிற்சியினால் குழந்தைகளுக்கு ஏற்பட்ட முன்னேற்றங்கள்

நம் பள்ளியில் பெரும்பாலான குழந்தைகள் மூளை முடக்குவாதத்தால் நடப்பதில் சிரமம் உள்ளவர்களாக இருக்கின்றனர். திருச்சி மையத்தில் Early Intervention பயிற்சியில் சுமார் 10 குழந்தைகள் வீல்சேர் பயன்படுத்துகிறார்கள். திருச்சி Daycare மையத்தில் 20 குழந்தைகள் வீல்சேர் பயிற்சி பெற்றுள்ளனர். அதுபோல நமது கிளை மையங்களான முசிறி, இலால்குடி, துறையூர், மணப்பாறையில் மொத்தமாக 60 குழந்தைகள் வீல்சேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களுக்கு அவர்களுடைய உட்காரும் திறன், எடை, உடல் அளவிற்கு ஏற்றவாறு வீல்சேர்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு சிறப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய அறிவுத்திறன் மற்றும் நகர்த்தி செல்லும் திறனை பரிசோதித்து அவர்களை வீட்டில் மட்டுமல்லாமல் வெளி இடங்களுக்கும் சென்றுவர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கழிவறை சென்று வருவதற்கேற்ற வகையில் குறைந்த செலவில் வீட்டின் வசதிகளை மேம்படுத்த பெற்றோர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கான பயிற்சிகளை ஆசிரியர்கள் பள்ளி வளாகத்திலே அளித்து வருகிறார்கள். பள்ளியில் வகுப்பறையில் இருந்து Physiotherapy பயிற்சி செய்யவும், பிற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடவும் வீல்சேர் பயன்படுத்தி வருகின்றனர். அதனால் குழந்தைகள் வீல்சேரில் சுயமாக சென்று வருவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

குழந்தைகளின் ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் பள்ளியில் அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. நுழைவுவாயிலில் இருந்து எந்த ஒரு இடத்திற்கும் சென்றுவரும் வகையில் கட்டிட அமைப்பு நமது ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நடக்க சிரமப்படும் குழந்தைகள் வீல்சேர் பயன்படுத்தும் குழந்தைகள் என பல நிலைகளில் குழந்தைகள் இருந்தாலும் அவர்களுக்குள் எந்த ஒரு பாகுபாடும் இல்லாமல் நட்பாக பழகிவருதல் அவர்களின் தன்னம்பிக்கையும் மனவலிமையும் காட்டுகின்றது. ஒருவருக்கொருவர் அவர்களுடைய சிரமத்திற்கு ஏற்றவாறு உதவிபுரிந்து கொள்வது அவர்களுடைய சிறந்த நடத்தையை பிரதிபலிக்கிறது. நமது பள்ளியின் பெற்றோர்களும் அனைத்து பயிற்சிகளையும் முழுமுயற்சியுடன் அளிப்பதால் குழந்தைகள் உடல் இயக்கத்திறன், அறிவுத்திறன் மற்றும் நடத்தை திறன்களில் சிறப்பாக முன்னேற்றமடைந்து வருகின்றனர்.

## BOCCIA

1984 முதல் போசியா முதன் முதலாக பாரா ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டது. தற்போது 75 நாடுகளில் அதிக உடல் இயக்க குறைபாடுள்ளவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்கிறார்கள்.

ஒரு நபரோ, இரண்டு அல்லது மூன்று நபர்கொண்ட அணியாகவும் விளையாடலாம். ஒரு அணிக்கு சிகப்பு நிற பந்துகளும், மற்றொரு அணிக்கு நீல நிற பந்துகளும் வழங்கப்படும். முதலாவதாக வீசப்பட்ட வெள்ளை நிற குறி பந்தை (Jack) நோக்கி அருகில் ஒவ்வொரு அணியும் பந்துகளை வீச வேண்டும். கை, கால் அல்லது வீசுவதற்கான வடிவமைக்கப்பட்ட சறுக்கல் பலகையை தனக்கேற்றவாறு பயன்படுத்தி பந்துகளை வீசலாம். எதிரணி பந்துகளையும் அடித்து தூரமாகவும் அல்லது Jack பந்தை அடித்து தன் அணி பந்துகளுக்கு அருகில் போகுமாறும் பந்துகளை வீசலாம். ஒவ்வொரு அணியும் மாறி மாறி வெற்றி பெறும் வகையில் பந்தை வீசுவார்கள். இறுதியில் இரு அணியின் பந்துகளின் தூரத்தை அளந்து Jack-ன் அருகில் உள்ள அணி வெற்றி பெற்ற அணியாக அறிவிக்கப்படுகிறது.

சென்னையில் நடைபெற்ற **Boccia** விளையாட்டு போட்டியில் கலந்து கொண்ட அனுபவத்தை வடிவேலுவின் தாயார் பகிர்ந்து கொண்டார்.

அனைவருக்கும் வணக்கம், நான் வடிவேல் தாயார். எனது மகன் முதல் முதலில் போச் கேம்முக்காக சென்னை சென்று வந்த அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். என் மகனுக்கு வயது 21 CP என்பதால் அவரது மொபிலிட்டிக்கு Wheelchair பயன்படுத்துகிறார். அதில் இருந்தவாறே கேம் விளையாட போகிறார் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சியை தந்தது.

13.02.2020 அன்று திருச்சியில் இருந்து இரயிலில் நண்பர்களுடன் பயணித்தது புதிய அனுபவத்தை தந்தது. அங்கு சென்றவுடன் போச் கேம் ஒருங்கிணைப்பாளர்கள் ராஜீவ் மற்றும் சதீஷ் சார் வித்யாசாகர் Special School –ல் எல்லா வசதியும் செய்து தங்க ஏற்பாடு செய்தார்கள். அன்று மாலை முழுவதும் கேம் பிராக்டிஸ் நடைபெற்றது. இந்த கேம் இருவர், இருவராக விளையாட வேண்டும். என் மகனுக்கு Ball தூக்கி எறிவதில் சிரமம் இருந்ததால் PVC Pipe ஐ பாதியாக அறுத்து அதன் உதவியுடன் விளையாடும்படி கூறினார்கள்.

இந்த கேம் புதிய உற்சாகத்தையும், கண்களுக்கும், கைகளுக்குமான ஒருங்கிணைப்பையும் தந்தது. தன்னால் முடியும் என்ற நம்பிக்கை அளித்தது. அவர்கள் சார்பாக தொப்பியும், டீசர்டடும் கொடுத்தார்கள். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து Wheelchair நண்பர்கள் வயது வாரியாக வந்திருந்தார்கள். அவர்கள் Modified Wheelchair மற்றும் Power Wheelchair யை பயன்படுத்தினார்கள் பெரும்பாலும் அவர்கள் நன்கு படித்தவர்களாகவும், வேலையில இருப்பவராகவும் இருந்தனர். அவர்கள் பழகும் விதம் எங்களிடம் இருந்த தாழ்வு மனப்பான்மையை போக்கியது. சுயமாக யோசித்து முழு முயற்சியுடன் எந்த வேலையாக இருந்தாலும் செய்கிறார்கள். எங்கள் குழந்தைகளையும் அவர்கள் போல் தன்னிச்சையாக செயல்பட வைக்க முடியும் என்ற நம்பிக்கையும், புதிய தைரியத்தையும் கொடுத்தது. விளையாட்டு என்றால் வெற்றியும், தோல்வியும் மாறி, மாறி வரும் என்பதை குழந்தைகள் மனதில் பதியவைத்தது.

நமது பள்ளி மாணவர்கள் போச் கேம் விளையாட சென்னை சென்ற அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.

நான் 3 level ஜெயித்து இறுதி வரை சென்றது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. நல்லா idea பண்ணி யோசித்து பொறுமையாக ball போட்டால் easy ஆக ஜெயித்து விடலாம் என்பதை நான் நன்றாக உணர்ந்து கொண்டேன் - ஐயப்பன்.

என்னை விட 20 வயது அதிகம் உள்ளவர்களிடம் final வரையும் கலந்து கொண்டோம். சென்னையில் பல இடங்களை சுற்றி பார்த்தோம். சென்னை மெரினா கடற்கரைக்கு சென்றோம். அங்கு மணல் வீல்சேரில் சென்றேன். கடற்கரை அழகாக இருந்தது. நாங்கள் மூன்று நாட்கள் சென்னையில் சந்தோஷமாக மகிழ்ச்சியாக இருந்தோம். – தினேஷ்

போச் கேம்முக்காக சென்னை சென்று வந்தது புது அனுபவமாக இருந்தது. பரா ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள முடியும் என்று நம்பிக்கை இங்கு சென்று வந்தவுடன் கிடைத்திருக்கிறது. எங்களுக்கு தேவையான adaptation கொடுக்கப்படுவதால் ஆர்வமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது. – விக்னேஷ்

## ACTIVITIES & PROGRAMMES AT A GLANCE

### INCLUSIVE EDUCATION

உள்ளடங்கிய கல்வி என்பது அனைவருக்கும் கல்வி என்ற பரந்த கல்வி கொள்கைக்கு உட்பட்டது. உள்ளடங்கிய கல்வியில் ஏனைய மாணவர்களுடன் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளையும் இணைத்து பொது பள்ளியில் கற்பித்தலே இதன் சிறப்பு அம்சமாகும். மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் கற்றல் தேவைகளை கருத்தில் கொண்டும் அவர்கள் கற்றலில் சந்திக்கும் சவால்களை தீர்க்கவும் உருவாக்கப்பட்டதே உள்ளடங்கிய கல்வி.

மாற்றுத்திறனாளிகளை உள்ளடங்கிய கல்வியின் குறிக்கோள்

- ☐ அனைவருக்கும் கல்வி அளித்தல்
- ☐ உரிமைகள் பாதுகாக்கப்பட உழைத்தல்
- ☐ திறன்களைக் கண்டறிதல்
- ☐ சமூக உணர்வுகளை வளர்த்தல்
- ☐ புதிய சவால்களைச் சந்திக்க தயார்படுத்துதல்
- ☐ சகோதரத்துவத்தை வளர்த்தல்
- ☐ கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்



மூளை முடக்குவாதக் குழந்தைகளுக்கு சீர் குறைபாட்டோடு மிதமான மனவளர்ச்சி குறைபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி திட்டத்தில் முதலாவதாக சிறப்பு கல்வி இன்றியமையாததாக அமைகிறது. இதனை தொடர்ந்து சாதாரண கல்வி திட்டத்தில் சேர்ந்து படிக்கக் கூடிய குழந்தைகள் இருப்பின் அவர்களை தேர்வு செய்து ரெகுலர் பள்ளியில் பயில்வதற்கு தயார்படுத்தலாம். ரெகுலர் பள்ளியில் சேர்ந்து படிக்கும் குழந்தைகளின் செயலாக்கத்தை கண்காணிக்க சிறப்பு கல்வியாளர்கள் அவ்வப்போது பள்ளியை விஜயம் செய்து, வகுப்பு ஆசிரியர்களுடன் கலந்து ஆலோசித்து, குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குவது அவசியமாகிறது. பொது தேர்வு எழுத எழுத்தாளர் (Scribe) தேவைப்படுவோருக்கு தகுந்த ஏற்பாடுகளும் செய்து தரப்படுகிறது.

இந்த உள்ளடங்கிய கல்வித் திட்டத்தின் கீழ் ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டியின் மூலம் பயன்பெற்று வரும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 56. கடந்த ஆண்டு பொது தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் விவரம்.

- ☐ 12-ம் வகுப்பு தேர்வு எழுதி வெற்றி பெற்றோர் -- 4 நபர்கள்
- ☐ 10-ம் வகுப்பு தேர்வு எழுதி வெற்றி பெற்றோர் - 5 நபர்கள்
- ☐ 8-ம் வகுப்பு தேர்வு எழுதி வெற்றி பெற்றோர் - 6 நபர்கள்

### NATIONAL CONFERENCE ON CEREBRAL PALSY

திருச்சி சேவை மையத்திலே செரிபரல் பால்சி குறித்த இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றும் மறுவாழ்வு பயிற்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் 87 பேர்கள் கலந்து கொண்டனர். 14 முக்கியமான துணை தலைப்புகளில் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கானது இதே துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் மூலம் நடத்தப்பட்டது. இது இந்திய மறுவாழ்வு கழகம் (RCI) அங்கீகாரம் பெற்ற CRE Programme என்பது குறிப்பிடதக்கது.



## ALUMNI ASSOCIATION

நமது சேவை மையத்தில் படித்து முடித்து விட்டு வெளியே சென்ற மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக துவங்கப்பட்ட மாணவ, மாணவியர் - பெற்றோர் சங்கம், Alumni Association கடந்த 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது. இது சேவை மையத்தில் படித்துக் கொண்டிருக்கும் மாணவ மாணவியருக்கும், படித்து முடித்த மாணவ மாணவிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு வருகிறது.



இந்த சங்கத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சுய தொழில் துவங்க வங்கி கடன் பெறுவது குறித்து அறிந்து கொள்ள சிறப்பு கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. இரவிச்சந்திரன் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரை வழங்கினார். சுமார் 60 பெற்றோர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## ORIENTATION PROGRAMME FOR ICDS WORKERS

ICDS துறையில் வேலை பார்க்கும் பால்வாடி அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊனத்தை குறித்து.



விழிப்புணர்வு ஏற்படுத்த தனிப்பட்ட சிறப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் முசிறி, இலால்குடி, துறையூர், புள்ளம்பாடி மற்றும் மண்ணச்சநல்லூர் தாலூக்காவில் பணிப்புரியும் 681 பேர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

## SPECIAL PROGRAMME ON WORLD CP DAY

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 6-ம் தேதி உலக மூளை முடக்குவாத தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த சிறப்பு தினத்தை முன்னிட்டு நமது சேவை மையத்திலே கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுவது உண்டு. கடந்த ஆண்டிலே ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டியின் கிளை மையங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உள்ளரங்கு கிரிக்கெட் போட்டிகளில் 6 அணிகள் கலந்து கொண்டன.



1.Trichy – Little Master,
2.Trichy – Super Kings,
3.Musiri – Spiders,
4.Lalgudi – Lions
5.Thuraiyur – Tigers
6.Manaparai – Bulls

இதில் **Trichy – Super Kings** முதல் பரிசையும், **Manaparai – Bulls** இரண்டாம் பரிசையும் வென்றது.

அதுபோல இந்த ஆண்டிலே குழந்தைகளின் பொது கல்வி அறிவை வளர்த்திடும் வகையில் வினாடி வினா போட்டிகள் (Quiz Competition) நடத்தப்பட்டது. இந்த போட்டிகளில் Lalgudi- Lions முதல் பரிசையும், **Trichy- Super Kings** இரண்டாம் இடத்தையும் பெற்றன. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த போட்டிகள் அனைத்தும் ஆன்லைன் Google Meet மூலம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## MURAL .... WALL PAINTING

ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் உள்ள கர்டன் பல்கலைகழகத்தில் (Curtin University) பயிற்சிக்காக,



இரண்டு குழுக்களாக, வருடத்தில் இருமுறை வருவதுண்டு. கடந்த முறை அவர்கள் இங்கு வந்திருந்தபோது திருச்சி மையத்தில் உள்ள சாய்வுதளத்தை (Ramp) அழகு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். சாய்வுதள சுவற்றில் கடலுக்கு அடியில் செல்லும் போது காணக்கூடிய கடல்வாழ் உயிரினங்களை தத்துருவமாக வரைந்து, பளிச்சிடும் வண்ண ஓவியங்களாக தீட்டி, அனைவரையும் பிரமிக்க வைத்துள்ளனர். இந்த ஓவியங்கள் குழந்தைகளுக்கு மட்டுமின்றி பெரியோர்களுக்கும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது.

## LOW COST MATERIAL FOR SENSORY STIMULATION

மூளை முடக்குவாதக் குழந்தைகளின் பயிற்சியில் முக்கிய இடம் வகிப்பது பயிற்சி உபகரணங்கள். இது குழந்தைகளின் பல்வேறு திறன்களை வளர்ப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், தூண்டுதலாகவும், உதவியாகவும அமைகிறது. ஒரு சில பயிற்சி உபகரணங்கள் விலையுயர்ந்த பொருட்களாக காணப்பட்ட போதிலும் அநேக பயிற்சி உபகரணங்கள் இன்னும் குறைந்த விலையில் கிடைக்கிறது. அதிலும் சிறப்பாக அமைவது வீட்டில் உள்ள பழைய, உபயோகமற்ற பொருட்களை கொண்டே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்படும் பயிற்சி உபகரணங்கள்.

இதனை வலியுறுத்தும் வகையில் ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கு பயிற்சிக்காக வந்து இருந்த ஆக்குபேஷனல் தெரபி பயிலும் மாணவிகள் எமது முசிறி கிளை மையத்தில் குறைந்த செலவில், எளிதில் கிடைக்க கூடிய பொருட்களை கொண்டே Sensory Stimulation Board ஒன்றை வடிவமைத்துள்ளனர். இந்த பயிற்சி உபகரணங்கள் கொண்டு குழந்தைகளுக்கு தேவையான புலன்கள் ஒருங்கிணைப்பு பயிற்சியினை திறம்பட அளிக்கலாம







மேலே குறிப்பிட்டுள்ள செயல் திட்டங்கள் தவிர கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்பிலே பயிற்சி பட்டறை பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெற நடத்தப்பட்டன.

1. தினசரி வேலைக்கான பயிற்சி
2. ஆரோக்கியமான உணவு முறை
3. மலச்சிக்கல் பிரச்சனையை சரி செய்ய பயிற்சி
4. வலிப்பை கையாளுதல்
5. அவசர நேரங்களில் கடைப்பிடிக்க வேண்டிய முதலுதவி குறித்த வழிமுறைகள்
6. நடத்தை பிரச்சனை உள்ள குழந்தைகளை கையாளும் முறைகள்
7. கைகளை சுத்தப்படுத்தும் முறைகளும் அதன் முக்கியத்துவமும்

கல்கி Ram K. Ramakrishnan,
B.E.,(Mech) G.G., (U.S.A.) JAG (U.S.A)

Kalki Jewellery
43/52, Chinnakadai Street,
Trichy 620 002
Cell : 92446 55300

Cauvery
CBW
Brick Works
ANBIL
Cell : 92446 55200, 92446 55300

Radha Jewellery
165-A/333, Big Bazaar Street,
Trichy 620 008.
Cell : 92446 55200